**கவனிக்க.**- *16.02.2018 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2060 - 2018 පෙබරවාරි මස 23 වැනි සිකුරාදා - 2018.02.23

*2060 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *286* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *296* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, மாச்சு மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மாச்சு மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

283-B81254 - 5403 (2018/02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அரசாங்க சேவை ஆணைக்குழு

## சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று அதிகாரப் பிரிவின் III ஆம் தரம்) பதவிக்கான திறந்த முறையில் ஆட்சேர்த்தல் - 2018

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் பதவி ஒன்றுக்கான வெற்றிடத்தினை நிரப்புவதற்காக இவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள்ள இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணமாகப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவினரால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் தோற்றி அதன் முடிவுகளின்படி அதிக புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரி ஒருவரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஆட்சேர்க்கப்படுவர். அதன்படி, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விடயங்கள் குறிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளவாறு (இலக்கம் 06 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் நடைமுறைகளுக்கு அமையவே அவ் ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவைப்படும் தகைமைகள் :**

(i) **கல்வி/ தொழிற் தகைமைகள்.**- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில், சட்டம் தொடர்பான பட்டப்படிப்பினைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தினால் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் ;

(ii) **அனுபவம்.**- உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட பின் வழக்கறிஞராக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாமல் தொடர்ச்சியான அனுபவத்தினைப் பெற்றிருத்தல் ;

(iii) **உடல் நலத் தகைமைகள்.**- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்த ஒரு பிரதேசத்திலும் பதவிக்குரிய கடமையினைச் செய்வதற்குப் போதியளவு உடல் நலம் மற்றும் மன நலத்தினைப் பெற்றுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iv) **ஏனைய தகைமைகள் :**

* இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;
* விண்ணப்பதாரி நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;
* சரளமாக ஆங்கில மொழியில் சம்பாசித்து, செயற்படக்கூடியவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்காக தேவைப்படும் தகைமைகள் அனைத்தும் முழுமையாகப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான தகுதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய சம்பளமுடையதுமாகும். தங்களுக்கு உரித்தான ஓய்வூதிய சம்பள முறையானது அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவிருக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு அமைய, தாங்கள் ஒழுகி நடக்க வேண்டும். தாங்களால் விதவைகள்/ தபுதாரர்கள்/ அநாதைகள், ஓய்வூதியச் சம்பள முறைமைக்கு அமைய பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் அடிக்கடி விடுக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைய தங்களின் பங்குப் பணம் செலுத்தப்பட வேண்டும் ;

(ii) இந்நியமனம் 3 வருடங்களுக்கு தகுதிகாண் காலத்தினை உடையது. பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட 3 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தகுதிகாண் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அதற்கு ஒப்புடமையான சுற்றறிக்கை நிபந்தனைகளுக்கு அமைய இப்பதவிக்கு நியமிக்கப்பட்டு ஐந்து

வருடங்கள் முடிவதற்கு முன்னர், சேவை தொடர்பாக குறிப்பிடப்பட்டு மொழிக்குப் புறம்பாக மேலதிகமான அரசாங்க மொழிகள் தொடர்பாகவும் தேவைப்படும் தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், அரச கரும மொழிகள் அல்லாத மொழியில் சேவைக்குச் சேர்க்கப்பட்டவர்கள் தகுதிகாண் காலத்தினுள் குறிப்பிட்ட அரசாங்க மொழியில் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினது சட்ட நடைமுறைகள், நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவையின் நிபந்தனைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிறைவேற்று அதிகாரிகள் பிரிவில் (சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக) உள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அதற்கென மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகள் மற்றும் அதனது விதிமுறைகளுக்கும் உட்படும் வகையில் நடத்தல் வேண்டும்.

4. **வயது எல்லை.**- விண்ணப்பதாரியின் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது 21 இற்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 என்ற (மாதாந்தம்) சம்பள அளவுத் திட்டத்திற்கு உரித்துடையவர் (2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03-2016 இன் இலக்கம் SL 1-2016 சம்பள அளவுத்திட்ட பிரிவிற்குரியது. எனவே தங்களுக்குச் சம்பளமாக வழங்கப்படுவது அச்சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டவாறாகும்.)

6. ஒழுங்குபடுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காகக் கீழ்வருமாறு தரப்பட்டுள்ள புள்ளிகளின் அடிப்படையில் வழங்கப்படும் :

| தொடர் இலக்கம் | பாடங்கள் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | **20** |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினது சட்டம் தொடர்பான பட்டப்படிப்பு : | | |
| | * முதலாவது வகுப்பில் சித்தி அடைந்ததற்காக | 20 | |
| | * இரண்டாம் வகுப்பு (Upper) சித்தி அடைந்ததற்காக | 15 | |
| | * இரண்டாம் வகுப்பு (Lower) சித்தி அடைந்ததற்காக | 10 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி வருடத்தில் முதலாம் வகுப்பில் சித்தி அடைந்ததற்காக | 15 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி வருடத்தில் இரண்டாம் வகுப்பில் சித்தி அடைந்ததற்காக | 10 | |
| | **குறிப்பு.**- விசேட சித்தியுடன் இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந் திருப்பின் அதற்கு மட்டும் 10 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். (ஆகக்கூடிய தகைமைகளுக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். பட்டதாரி பட்டம் அல்லது சட்டக் கல்லூரிகளில் உள்ள தகைமை களில் ஒன்றினைப் பெற்றிருந்தால் மட்டுமே.) | | |
| 02 | **மேலதிக தொழிற் தகைமைகள்** | | **15** |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உரிய துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாது பட்டப்பின் படிப்பு பட்டதாரி டிப்ளோமா கற்கைநெறி அல்லது பட்டப்படிப்பு சட்ட டிப்ளோமா கற்கை நெறியினைத் தொடர்ந்து முடிந்தமைக்காக வழங்கப்படும். (ஒரு வருட டிப்ளோமாவுக்குரிய புள்ளிகள் 5 ஆகும்.) | | |

| தொடர் இலக்கம் | பாடங்கள் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப் பட்ட சான்றிதழ் உரிய துறை தொடர்பாக 6 மாதங்களுக்குக் குறை யாத டிப்ளோமா கற்கைநெறிக்காக இருக்க வேண்டும்.<br>(ஒரு டிப்ளோமாவுக்கு புள்ளிகள் 3 என்றவாறு)<br><br>அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப் பட்ட சான்றிதழ் உரிய துறையில் தொடர்புபட்ட பாடநெறிச் சான்றிதழ் ஆனது 3 மாதத்திற்குக் குறையாத பாடநெறியுள்ளதற்காக இருக்க வேண்டும். (ஒரு பாடநெறிக்கு 2 புள்ளிகள் விகிதம்) | | |
| 03 | **மேலதிக அனுபவம்**<br><br>சட்ட வழக்கறிஞராகக் கடமையாற்றி அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் பெற்றுள்ள அனுபவம் :<br><br>- ஒரு வருடத்திற்குரிய சேவைக்கு புள்ளிகள் 5 என்றவாறு ஆகக் கூடியது புள்ளிகள் 30 ஆகும்.<br><br>- 6 மாதத்திற்கு மேற்பட்ட மற்றும் ஒரு வருடத்திற்குக் குறைவானவை யாயின் : புள்ளிகள் 2<br><br>(அடிப்படைத் தகைமைகளைப் பெற்றிருந்தமைக்காக உறுதிப்படுத்தத் தேவைப்படும் சட்ட வழக்கறிஞராக செயற்பட்ட 3 வருட சேவைக் காலத்தினைத் தவிர்ந்த காலப்பகுதி)<br><br>(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய் துள்ள சட்ட வழக்கறிஞர் அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிவானாக அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட கால எல்லைக்கு அல்லது அக்குறிப்பிட்ட கால எல்லைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்/ சான்றுப்பத்திரம் என்பனவற்றின் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) | | **30** |
| 04 | **ஆங்கில மொழித் தகைமைகள்**<br>(ஆகக்கூடிய புள்ளிகள் 15) | | **15** |
| | ஆங்கில மொழி மூலம் பட்டப்பின் படிப்பு/ பட்டம்/ பட்டப்பின் படிப்புக்குரிய சட்டப் படிப்பு/ சட்டத்தில் பட்டப் படிப்பு<br>(உரிய பல்கலைக்கழக கேள்விப்பத்திரத்தில் உள்ள அனைத்து கேள்வி களுக்குமாக ஆங்கில மொழியில் விடையளித்திருக்க வேண்டும்.) | 15 | |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வழங்கப்பட்டுள்ள ஆங்கில மொழிக்குரிய டிப்ளோமா பாடநெறி பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழுக்காக (01 வருடம் அல்லது 1,500 மணித்தியாலங்களைக் கொண்டவை) | 10 | |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட | | |

| தொடர் இலக்கம் | பாடங்கள் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | நிறுவனத்தில் நடத்தப்பட்ட ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் பாடநெறியினைப் பயின்று பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழுக்காக : | | |
| | - 6 மாதம்/ 720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 3 மாதம்/ 360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (ஆகக்கூடிய தகைமைகளுக்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 05 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு** (ஆகக்கூடிய புள்ளிகள் 15) | | **15** |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்திற்காக தகவல் தொழில்நுட்பத்தினை ஒரு பிரதான பாடமாகக் கொண்டு பயின்றிருத்தலுக்காக. | 15 | |
| | அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் 1 வருடத் திற்குக் குறையாதவாறும் (1,500 மணித்தியாலங்களுக்காகவும்) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியினைப் பயின்று பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழுக்காக | 10 | |
| | தொழில்நுட்பம் தொடர்பாக வழங்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் பத்திரம் பாடநெறியினைப் பயின்று பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழுக்காக : | | |
| | - 6 மாதம்/ 720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 3 மாதம்/ 360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (ஆகக்கூடிய தகைமைகளுக்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 06 | **நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறமைகளுக்காக** | | **05** |
| | **மொத்தம்** | | **100** |

7. **பரீட்சார்த்தியினைப் பற்றிய தகவல்கள்**.- ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது சகல வழிகளிலும் முற்றாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே அழைக்கப்படுவர்.

ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சகல சான்றிதழ்களதும் முதல் பிரதிகள் மற்றும் உரிய முறையில் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பின்வரும் சான்றுப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறைகள்** :

(i) விண்ணப்பப்படிவம் 2018.03.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

செயலாளர்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
இலக்கம் 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரி அவரது விண்ணப்பப்படிவத்தினை ஏ4 அளவுப் பிரமாணப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு முதல் பக்கத்தில் இலக்கம் 1.1 தொடக்கம் 5.1 வரைக்குமாகவும் இரண்டாம் பக்கம் 5.2 தொடக்கம் 7 வரைக்குமாகவும் மூன்றாம் பக்கம் 8 தொடக்கம் 9 வரைக்குமாகவும் அமையுமாறு தயார்படுத்தி தமது கையொப்பத்தினை இட்டு பூரணப்படுத்தப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பம் மூடப்பட்ட உறையில் இடது மேல் பக்கத்தில் "மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின், சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரத் தரத்திலுள்ள உத்தியோகத்தர் அல்லது ரூபா 32,807 இற்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்தம் ஒன்றுதிரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண சபையில் சேவை புரியும் நிரந்தரப் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பம் அவர்கள் சேவை புரியும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரின் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சமர்ப்பிக்கப்படாத, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் தொலைந்து போதல் அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெற்றுள்ளமை போன்ற எந்தவொரு கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **உண்மையான தகவல்களைச் சமர்ப்பித்தல்.**- தங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் உண்மைக்குப் புறம்பானவை அல்லது பிழையானவை என்று தங்களை ஆட்சேர்ப்பதற்கு முன்னர் தெரியவரின் தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அவ்வாறு உண்மைக்குப் புறம்பான அல்லது பிழையான தகவல்கள் ஆகியவற்றுடன் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் அறியவரின் அதற்குரியவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சேவையில் இருந்து தங்களை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

10. வெற்றிடம் நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விட்டுவிடுதல் போன்ற உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரிய விடயமாகும்.

*இவ்வர்த்தமானி விளம்பரம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம்பெறுவதுடன் அது தொடர்பாக ஏதாவது ஒரு விடயம் அல்லது கருத்து வேற்றுமைகள் இருப்பின் அது தொடர்பான செயற்பாடுகள் சிங்கள மொழியில் உள்ளவாறே எடுத்துக்கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவுப்படி,

எச். டீ. கே. பத்மசிறி,
செயலாளர்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
கொழும்பு 02,
2018, பெப்புருவரி 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பயன்பாட்டிற்காக)

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) திரு./ திருமதி/ செல்வி :----.

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்) :----.

2. 2.1 நிரந்தர விலாசம் :----.

2.2 தொலைபேசி இலக்கம் :

வதிவிடம் :----.

நடமாடும் :----.

3 3.1 தேசிய இனம் : ☐

(சிங்களவர் -1, தமிழர் -2 , முஸ்லிம் - 4, ஏனையவர் - 5)

3.2 பெண்/ ஆண் :

| | |
|---|---|
| பெண் | |
| ஆண் | |

3.3 விவாகமானவரா/ விவாகமாகாதவரா :

| | | | |
|---|---|---|---|
| விவாகமானவர் | | விவாகமாகாதவர் | |

3.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.5 பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

3.6 2018.03.26 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

4. 4.1 சட்டம் தொடர்பாகப் பெற்றுள்ள கல்வித் தகைமைகள் பற்றிய விபரம் :

(அ) (i) பல்கலைக்கழகம் :----. (ஆ) (ii) சட்டக் கல்லூரி ப. தி. இலக்கம் :----.

(iii) பட்டம் வழங்கப்பட்ட திகதி :----. (iv) சட்டப் பரீட்சையில் சித்தி அடைந்த திகதி :----.

5. 5.1 உயர் நீதிமன்றில் நீதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட திகதி :----.

5.2 க.பொ.த (சா.த) பரீட்சையில் அல்லது க.பொ.த (உ.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் பெற்றுள்ள சித்தி :----.

5.3 சட்டத்தரணியாக தேர்ச்சி பெற்ற அனுபவம் (வருடங்கள் எண்ணிக்கை) :----.

(கால எல்லை மற்றும் அலுவலகத்தில் எவரிடத்தில் இருந்து அனுபவம் பெற்றுள்ளீர் என்பது பற்றிக் குறிப்பிடவும்) :----.

5.4 விண்ணப்பம் கோரியுள்ளபடி 06 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் :----.

| தொடர் இலக்கம் | தகைமைகள் | நிறுவனம் | கால எல்லை |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமை | | |
| 02 | மேலதிக தொழில் தகைமை | | |
| 03 | மேலதிக அனுபவம் | | |
| 04 | ஆங்கிலம் | | |
| 05 | தகவல் தொழில்நுட்பம் | | |

6. தாங்கள் எப்போதாவது அல்லது ஏதாவது குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாக தண்டிக்கப்பட்டுள்ளீரா ?

ஆம்/ இல்லை

6.1 ஆம் எனில் விபரங்களைச் சமர்ப்பிக்கவும் :----.

7. விண்ணப்பப்படிவத்தினை உறுதிப்படுத்துதல் :-

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் பிழையற்றவையுமாகும் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஏதாவது விபரங்கள் பிழையானவை அல்லது பிழை என்று அறியவரின் தெரிவுசெய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் நான் இப்பதவிக்குத் தகுதியற்றவர் என்றும் என்னை இப்பதவியில் நியமிக்கப்பட்ட பின் அப்பிழைகள் கண்டுபிடிக்கப்படின் எந்தவொரு நஷ்டஈடுமில்லாமல் என்னைச் சேவையில் இருந்து நீக்குவதற்கும் இணங்கி கீழ்ப்படிந்து நடப்பேன் என்றும் அறிவிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்திபெற்ற நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரத்திலுள்ள உத்தியோகத்தர்/பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றின் உத்தியோகத்தர் அல்லது ரூபா 32,827 இற்கு அதிகமான அடிப்படைச் சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஆகியோரின் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ் விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி........................................ (முழுப் பெயர்) அவர்களை/ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ................................. ஆந் திகதி எனது முன்னிலையில் மேற்குறிப்பிடப்பட்ட 7 ஆவது பந்தியின்கீழ் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
(பதவி முத்திரையினை இடவும்.)

திகதி :----. தொலைபேசி இலக்கம் :----.

8. விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ................................... (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், .......................................... ஆந் திகதி அவரின் கையொப்பம் எனது முன்னிலையில் மேற்குறிப்பிடப்பட்ட 07 ஆவது பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

அவர்/ அவரது வேலை, வரவு மற்றும் நடத்தை ................................ என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிப்பதற்கு முடியும்/ முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(பதவி முத்திரையைக் கொண்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.)
திகதி :-----.

2-853

## நீதிச்சேவைகள் ஆணைக்குழு

உதவி விசாரணை அதிகாரி பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரல்

நீதிச் சேவைகள் ஆணைக்குழுச் செயலகத்தின் உதவி விசாரணை அதிகாரி பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத் திட்டம்**.- 03/2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றுநிருபத்திற்கு அமைவான சம்பள அளவு SL 1-2016 ஆகும். அதாவது ரூ. 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - 1,10,895 ஆகும். ஆரம்ப சம்பள படிநிலையானது இச்சம்பள படிநிலையின் 3 ஆவது படிநிலை (ரூ. 50,285) ஆகும். ரூ. 58,295 இனைக் கடந்து செல்லும் முன்னர் வினைத்திறன்காண் தடைத்தாண்டலாக அமையும். 45 வயது நிரம்பிய, உரிய சம்பள படிநிலையினை அடைந்த விண்ணப்பதாரிகள் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். (2020.01.01 ஆந் திகதி வரை பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை II அமைவாக சம்பளம் வழங்கப்படும்.)

3. **வயது எல்லை**.- விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 21 வயதிற்குக் குறையாமல் 35 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான நியமனங்களை உடையவர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

4. **கல்வி மற்றும் வேறு தகைமைகள்** :

(அ) செயற்பாட்டு ரீதியாக 4 வருடங்களுக்குக் குறையாமல் தொழிலில் ஈடுபட்டுள்ள சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) இலங்கைப் பதிவாளர் சேவையின் II ஆம் வகுப்பின் உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் ;

அல்லது

(இ) அரசின் சட்டத்துறை சார் பிரிவுகளின்கீழ் 7 வருட சேவைக்காலத்தையும் மற்றும் சாதாரண எழுதுநர் சேவையின் முதலாவது வகுப்பின்/அரச முகாமைத்துவ உதவிச் சேவையின் தரம் I இல் 5 வருட சேவைக்காலத்தையும் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல் அல்லது அரச சட்டத் துறைசார் பிரிவுகளில் 12 வருட அனுபவத்தையும் மற்றும் சாதாரண எழுதுநர் சேவையின் II ஆம் தரத்தின் 'அ' பிரிவில்/அரச முகாமைத்துவ உதவிச் சேவையின் தரம் II இல் 10 வருட சேவைக்காலத்தையும் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- நீதிமன்ற நடபடிமுறைகள், கணக்கீட்டு நடவடிக்கைகள், நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான அனுபவத்தைக் கொண்டிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

5. சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்களைக் கோரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமாகும்.

6. **சகல விண்ணப்பதாரிகளும்**,

(அ) நன்நடத்தையும் சிறந்த ஆரோக்கியமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

7. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துடனானது. பதவிக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் எதிர் காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் கட்டுப்படல் வேண்டும்.

8. கீழ்வரும் ஆவணங்களை வேண்டி நிற்கும்போது அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரிகள் தயாராக இருக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) உயர் தகைமையினைக் கொண்ட கல்விச் சான்றிதழ் ;

(இ) தொழில்சார் தகைமை தொடர்பான சான்றிதழ் ;

(ஈ) சிங்கள/தமிழ்/ஆங்கில மொழியில் பெற்றுள்ள உயர் சித்தியினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(உ) நீதிமன்ற நடபடி முறைகள், கணக்கீட்டு நடவடிக்கைகள், கணக்காய்வு நடவடிக்கைகள், நிர்வாக நடவடிக்கைகள், விசாரணை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் (இருப்பின்).

9. உரிய மாதிரிப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கு அமைவாக தயாரிக்கப்படாத மற்றும் சரியாகப் பூர்த்திசெய்யப்படாத முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூரணப்படுத்தாமையினால் ஏற்படக்கூடிய இழப்பினை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

10. சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2018.03.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், நீதிச் சேவைகள் ஆணைக்குழுச் செயலகம், புதுக்கடை, கொழும்பு 12" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அல்லது நேரடியாகக் கையளிக்கலாம்.

11. விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவி விசாரணை அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

12. அரசில்/ கூட்டுத்தாபனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் திணைக்களத் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணப் பரிமாற்றம் தொடர்பில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களையே தொடர்புகொள்ள வேண்டும். அது தொடர்பில் இவ்வலுவலகத்தின் வேறு எந்த அதிகாரிகளையும் தொடர்புகொள்ளக் கூடாது.

14. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் அரச சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகள் தொடர்பிலும் விண்ணப்பதாரிகள் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

சஞ்ஜீவ சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆணைக்குழு.

நீதிச்சேவைகள் ஆணைக்குழு செயலகம்,
கொழும்பு 12,
2018, பெப்புருவரி 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதிச்சேவைகள் ஆணைக்குழு**

உதவி விசாரணை அதிகாரி பதவி

1. (i) முழுப்பெயர் (தமிழில்) :----.

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. (i) நிரந்தர முகவரி :----.

(ii) அலுவலக முகவரி :----.

3. இனம் :----.

4. (i) பிறந்த திகதி :----.

(ii) வயது :----.

5. (i) ஆண்/பெண் நிலை :----.

(ii) சமூக அந்தஸ்து :----.

(iii) கணவன்/மனைவி அரச/கூட்டுத்தாபனத்தில் அல்லது தனியார் நிறுவனமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ளார் எனின், அது தொடர்பான விபரங்கள் :----.

6. கல்வி/தொழில்சார் தகைமைகள் (திகதி குறிப்பிட்டு) :----.

7. வர்த்தமானப் பத்திரத்தின் 4 ஆவது பந்தியின் (அ), (ஆ), (இ) மற்றும் அதன் குறிப்புக்களின் கீழான உரிய விபரங்கள் முழுமையாக (திகதி/காலப்பகுதி என்பவற்றைக் குறிப்பிட்டு) :----.

8. (i) சட்டத்தரணி எனின் தொழிலுக்கு நுழைந்த திகதி :----.

(ii) செயற்பாட்டு ரீதியாக தொழிலில் ஈடுபட்டுள்ள காலம் (திகதி மற்றும் காலப்பகுதியைக் குறிப்பிடல் வேண்டும்) :----.

9. அரச/ கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டிருப்பின் முழுமையான சேவை விபரம் (திகதி மற்றும் காலப்பகுதியைக் குறிப்பிடல் வேண்டும்.) :----.

10. சித்தி பெற்றுள்ள உயர் பரீட்சை :

(i) சிங்களத்தில் :----.

(ii) தமிழில் :----.

(iii) ஆங்கிலத்தில் :----.

11. பிரத்தியேக தகவல்களை விசாரிக்கக்கூடியவர்கள் (நீங்கள் நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த நபர்களாக இருக்க வேண்டும்.) :----.

(அரச/கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது பொருந்தாது.)

(i) பெயர் :----.

முகவரி :----.

தொழில் :----.

நீங்கள் அறிந்திருக்கும் காலம் :----.

(ii) பெயர் :----.

முகவரி :----.

தொழில் :----.

நீங்கள் அறிந்திருக்கும் காலம் :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என இத்துடன் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

திணைக்கள/ கூட்டுத்தாபனத் தலைவரின் சான்றுரை

.......................................................... எனும் உத்தியோகத்தரினால் இங்கு 9 ஆவது இலக்கத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அவரது பிரத்தியேக கோவைக்கு அமைவாக சரியானவையாகும். மேற்குறிப்பிட்ட பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் இவரை விடுவிக்க முடியும்/ முடியாது என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/ கூட்டுத்தாபனத் தலைவர்.

திகதி :----.

2-609

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

## இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்

### உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் - கல்வி ஆண்டு 2018

2017 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோரிடமிந்து இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தால் (SLIATE) நடாத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிக்கும் முறை.-** கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டு, ஆங்கிலத்தில் முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள் உயர் தொழில்நுட்பவியல் நிறுவக வங்கிக் கணக்கு இல. 025-2-001-1-3397613 ஏதேனும் மக்கள் வங்கிக் கிளையில் 500 ரூபா (ஐநூறு) பற்று வைத்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் பதிவுத்தபாலில், பிரிவு "ஆ" இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/ பிரிவிற்கு அனுப்பப்படல் வேண்டும். "விண்ணப்பிக்கும் பாடநெறியை" கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிறுவகங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள், அவர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ரூபா 500 பெறுமதியான தனித்தனி பற்றுச்சீட்டை இணைத்து தனித்தனி விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்தை தவிர்ந்த ஏனைய கணக்கு இலக்கங்களுக்கு பற்று வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

பிரிவு 'ஆ' இல் நடாத்தப்படும் பாடநெறிகள் போன்றே உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்கள்/ உ. தொ. நி. பிரிவுகளின் முகவரிகள் தரப்பட்டுள்ளன. தங்கள் தகைமைகளுக்கேற்ப பிரிவு "அ" வில் தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தமக்கான கல்வி நிகழ்ச்சித்திட்ட பாடநெறிகளை தெரிவுசெய்தல் வேண்டும்.

**விரிவுரைகளின் வகை :**

| | | |
|---|---|---|
| பகல்/ முழுநேர பாடநெறிகள் | : | வேலை நாட்கள், பகல் நேரம் |
| பகுதி நேர பாடநெறிகள் | : | வார இறுதி நாட்கள், பகல் நேரம் |
| மொழிமூலம் | : | ஆங்கிலம் |

உரிய துறையில் கடமையாற்றுவோருக்கே பகுதி நேர பாடநெறிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**பாடநெறிக்கான கட்டணங்கள்.-** பகல்/ முழு நேர பாடநெறிகளுக்கு எவ்வித பாடநெறிக் கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. பகுதிநேர பாடநெறிகளுக்கான தவணைக் கட்டணங்கள் (semester) பின்வருமாறு :

கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) ரூபா 5,000.
ஆங்கிலம் உயர் தேசிய டிப்ளோமா (HND in English) ரூபா 8,000.
தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT) ரூபா 12,000.

**பதிவு செய்தல்.-** பாடநெறி பதிவின்போது தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆவணங்களின் மூலப்பிரதிகளையும் சான்றுப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தங்குமிட வசதிகள்.-** பெண்களுக்கான வரையறை செய்யப்பட்ட தங்குமிட வசதிகள் உயர் தொழில்நுட்ப நிறுவகங்களான கம்பஹா/ தெஹிவளை பகுதிகளிலும் ஆண்/ பெண் இருபாலாருக்குமான தங்குமிட வசதிகள் அம்பாறை ஹார்டி உ. தொ. நி./ கொழும்பு ஆகிய பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசதி முழுநேர பாடநெறி மாணவர்களுக்கு மாத்திரமேயாகும்.

பகுதி - "அ"

ஒவ்வொரு பாடநெறிக்குமான தகைமைகள் :

***1. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா - (HNDA)***

*1.1 முழுநேரம் - 4 வருடங்கள்.*

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பொருளியல் மற்றும் கணக்கியல் பாடங்களில் திறமைச் சித்தியுடன் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பொருளியல் மற்றும் கணக்கியல் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதற்கு மாற்றீடாகக் கருதப்படும்.

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

1.2 பகுதி நேரம் - 4 வருடங்கள்

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சகல பாடங்களும் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும்-

(அ) கணக்கீட்டு தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

(ஆ) வியாபாரக் கல்வி (கணக்கியல்) தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

(இ) கணக்கியல் பற்றிய தேசிய சான்றிதழைப் பூர்த்திசெய்திருத்தல்

அத்துடன்

விண்ணப்பதாரி அரசாங்க நிறுவனம்/ பொது தொழில் முயற்சி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உரிய துறையில் சேவையாற்றுபவராக இருத்தல் வேண்டும்.

பின்வரும் தகைமை கொண்டோர் முதலாம் ஆண்டில் விலக்களிக்கப்பட்டு, இடம் அத்துடன் அனுமதியின் போதான தகைமைகளின் அடிப்படையில் இரண்டாம் ஆண்டிற்கு அனுமதிக்கப்படுவார்கள் :-

(i) தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தால் நடாத்தப்பட்ட வியாபார நிருவாகம்/ வியாபார நிதி/ முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமாவைப் பூர்த்தி செய்திருத்தல் ;

(ii) தொழில்நுட்ப கல்வி நிறுவகம் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட வர்த்தக உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் இரண்டாம் ஆண்டைப் பூர்த்திசெய்தல்.

(iii) தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் அல்லது தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தால் நடாத்தப்பட்ட வியாபாரக் கல்வி தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பூர்த்தி செய்திருத்தல் ;

(iv) கீழ்க்குறிப்பிடப்பட்ட உரிய துறையில் பல்கலைக்கழக பட்டம் பெற்றிருத்தல் (கணக்கியல்/ வியாபார நிருவாகம்/ சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/ மனிதவள முகாமைத்துவம்/ வியாபார நிதி/ வர்த்தமானி (B. Com) ;

(v) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் நடாத்தப்படும் நிறைவேற்றுத் தர அல்லது சீஏபீ I, சீஏபீ II அல்லது லைசெஷிஏட் I, II (Licentiate) பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் ;

(vi) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவன (CIMA - UK), பகுதி I, II பரீட்சைகளைப் பூர்த்திசெய்திருத்தல் ;

(vii) ஏஏரீ (AAT) நிறுவக III ஆம் கட்டம் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் ;

(viii) "சீஎம்ஏ" (CMA - SRI LANKA) நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற ஏசீஎம்ஏ (ACMA) இறுதிப் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல்.

**மு. குறிப்பு.**- கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) - முழுநேரம்/பகுதி நேரம்

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 46/90 இன் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறையின்போது கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழானது, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக வணிகமானி பட்டத்திற்கு (சாதாரண சித்தி) மாற்றீடாகக் கருதப்படும்.

***02. கட்டிட சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிபீஎஸ்ஈ)*** - முழு நேரம் - 3 1/2 வருடங்கள்

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் உட்பட) சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***03. வியாபார நிர்வாக உயர் தேசிய டிப்ளோமா - (எச்என்டிபீஏ)*** - முழு நேரம் - 2 1/2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***04. வியாபார நிதி உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிபிஎவ்)*** - முழு நேரம் - 2 2/1 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***05. நுகர்வோர் விஞ்ஞானம் மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிசீஎஸ்பிரி)*** - முழு நேரம் - 3 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மனைப்பொருளியல் உட்பட ஏதேனும் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***06. பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ*** - சிவில்) முழு நேரம் 3 1/ 2 வருடங்கள்

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் உட்பட) சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***07. பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ*** - மின் இலத்திரனியல்) - முழு நேரம் : 3 1/ 2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் உட்பட) சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***08. பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ - இயந்திரவியல்)*** - முழு நேரம் : 3 1/ 2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் உட்பட) சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***09. ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டி)*** - முழு நேரம் : 2 1/ 2 வருடங்கள்.

09.1. முழுநேரம் - 2 1/2 வருடங்கள்

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி அல்லது ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

கல்வியியல் கல்லூரியினால் வழங்கப்பட்ட டிப்ளோமா அல்லது ஆங்கில நிபுணத்துவ ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்

அல்லது

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

09.2 பகுதி நேரம் - 2 1/2 வருடங்கள்

09.1 இன் தகைமைகளுக்கு மேலதிகமாக உரிய துறையில் அரசாங்க நிறுவகம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சேவை புரிபவராய் இருத்தல் வேண்டும்.

*10. உணவு தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஎவ்ரி)* - முழு நேரம் : 2 1/ 2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானம் அல்லது உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

*11. தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஐரி)* -
11.1 முழு நேரம் : 2 1/ 2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் (உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், வர்த்தகம், தொழில்நுட்பம் மற்றும் கலைப் பிரிவுகள் (ICT ஐ பாடமாகக் கொண்ட) இற்கு முன்னுரிமை வழங்கப்படும் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

11.2 பகுதி நேரம் - 2 1/2 வருடங்கள்.

11.1 இன் தகைமைகளுக்கு மேலதிகமாக உரிய துறையில் அரசாங்க நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சேவை புரிபவராய் இருத்தல் வேண்டும்.

*12. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஎம்)* - முழு நேரம் : 3 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் வியாபாரக் கல்வி (பொது நிர்வாகம்/ சந்தைப்படுத்தல்) தேசிய சான்றிதழ் அல்லது கணக்கீட்டு தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல்.

அத்துடன்

(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

*13. திட்ட முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிபிஎம்)* - முழு நேரம் : 2 1/ 2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேதனும் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றி ருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***14. பரிமாண நில அளவை உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிகியூஎஸ்)*** - முழு நேரம் : 2 1/ 2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் (இரசாயனவியல், பௌதிகம், இணைந்த கணிதம்) ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***15. தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா*** - விவசாயம் (எச்என்டிரி - விவசாயம்) - முழு நேரம் : 3 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் (இரசாயனவியல், உயிரியல், பௌதிகம் அல்லது விவசாயம்) ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

***16. உல்லாச மற்றும் உபசரணை முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிரிஎச்எம்)*** - முழு நேரம் : 3 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு :**

* பகுதிநேர விண்ணப்பதாரிகள் உரிய துறையில் அல்லது சம்பந்தப்பட்ட தொழில் அல்லது வியாபாரம் பற்றிய பதிவுச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

* முழுநேர பாடநெறிகளுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத கால தொழிற்சாலைப் பயிற்சி உள்ளடக்கப்பட்டுள்ளது ;

* பகுதிநேர பாடநெறிகளுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத கால திட்டம் (Project) உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பிரிவு 'ஆ'**

உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவுகளின் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் நிகழ்த்தும் பாடநெறிகள் :-

| குறியீட்டு இல. | நிறுவகப் பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | பாநெறிகள் |
|---|---|---|---|---|
| 01 | ஹார்டி உயர் தொழில் நுட்பவியல் நிறுவகம், அம்பாறை | பேராசிரியர் ஈவன் ஏ. ஹார்டி மாவத்தை, அம்பாறை | 063-2222056, 063-2223035 071-8100975 071-7638653 | எச்என்டிஏ (மு. நே.), என்என்டிஏ(ப. நே.), எச்என்டிஎம், எச்என் டிஐரி(மு. நே.), எச் என்டிரி (விவசாயம்) ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.) எச்என்டி ஆங்கிலத்தில் (ப. நே.) எச்என்டிரிஎச்எம், எச்என்டிபிஎம் |

| குறியீட்டு இல. | நிறுவகப் பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | பாநெறிகள் |
|---|---|---|---|---|
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, அநுராதபுரம் | அக்கற III, அநுலா மாவத்தை, பண்டுலுகம அநுராதபுரம் | 025-2234417<br>071-6564572<br>071-5177580 | எச்என்டிஏ(மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம், எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.), எச்எம்டிரிஎச்எம் |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், பதுளை | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | 055-2230218,<br>055-2223818<br>077-8094573<br>071-2347677 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம், எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டி ஆங்கிலத்தில் (மு. நே.), எச்என்டி, ஆங்கிலத்தில் (ப. நே.) எச்என்டிரீஎச்எம் |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, மட்டக்களப்பு | மெயின் வீதி, கோவில் குளம் கிழக்கு, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 065-2247519<br>065-2247470<br>077-8641182<br>071-6376307 | எச்என்டிஏ(மு. நே.) எச்என்டிஏ (ப. நே.), எச்என்டி ஆங்கிலத்தில் (மு. நே.), எச்என்டி ஆங்கிலத்தில் (ப. நே.), எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டிரிஎச்எம் |
| 05 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், கொழும்பு | இல. 42, ரொற்றிகோ இடம், கொழும்பு 15 | 011-2521152<br>011-2521282<br>077-7800909<br>071-4970484 | எச்என்டிஈ (சிவில், இயந்திரவியல், மின்பொறியியல்) என்டிகியூஎஸ், எச்என்டிபீஎஸ்ஈ |
| 06 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், தெஹிவளை | இல. 51, வைத்தியா வீதி, தெஹிவளை | 011-2738349<br>071-8085371<br>071-4407665 | எச்என்டிஏ(மு. நே.), எச்என்டிஏ(ப. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.), எச்என்டிபிஎவ், எச்என்டிரிஎச்எம் |

| குறியீட்டு இல. | நிறுவகப் பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | பாநெறிகள் |
|---|---|---|---|---|
| 07 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், காலி | ஸ்ரீ தம்ம மாவத்தை, லபுதூவ, அக்மீமன | 091-2246179<br>077-1681233<br>071-0968530 | எச்என்டிஈ (சிவில், இயந்திரவியல், மின்னியல்), எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப.நே.), எச்என்டிஎம், எச்என்டி ரிஎச்எம், எச்என்டிபீஏ, எச்என்டி ஐரி(மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டிரி (விவசாயம்) ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி(ப. நே.), எச்என்டிரிஎச்எம், எச்என்டிகியூஎஸ், எச்என்டிபிஎம் |
| 08 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், கம்பஹா | நைவல, எஸ்ஸெல்ல, வெயாங்கொடை | 033-2287519,<br>033-2292544<br>071-5511205<br>077-2917792 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ(ப. நே.), எச்என்டிஐரி(மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டிரி (விவசாயம்), எச்என்டிஎவ்ரி, எச்என்பி சீஎஸ்பீரி |
| 09 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், யாழ்ப்பாணம் | இல. 665/ 2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595<br>021-2229803<br>071-8447486<br>077-7113664 | எச்என்டிஈ (சிவில் மற்றும் மின்னியல்), எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம், எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.), எச்என் டிரிஎச்எம், எச்என்டிகியூஎஸ், எச்என்டிவீஎம் |
| 10 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல மாவத்தை, கண்டி | 081-2232097<br>071-9175285<br>077-4538133 | எச்என்டிஏ(மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம், எச்என் டிபீஏ, எச்என்டிஐரி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி, ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.), எச்என்டிஐரி எச்எம் (மு. நே.) |

| குறியீட்டு இல. | நிறுவகப் பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | பாநெறிகள் |
|---|---|---|---|---|
| 11 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297<br>035-2221713<br>071-4848210<br>071-6254659 | எச்என்டிஏ(மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஐரி(மு. நே.) ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.) எச்என்டிபிஎம் |
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், குருநாகல் | இல. 22/ 1, வில்கொட வீதி, குருநாகல் | 037-2229583<br>037-2224911<br>071-4882528 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம் (மு. நே.), எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), ஆங்கிலம் எச்என்டி (மு. நே.), ஆங்கிலம் எச்என்டி (ப. நே.), எச்என்டிரீஎச்எம் |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, மன்னார் | இல. 201, உள்ளூர் ஆங்கில உதவி மத்திய நிலையம், தலைமன்னார் வீதி, மன்னார் | 023-3122555<br>076-7966111 | ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), எச்என்டி ரிஎச்எம், எச்என்டிஐரி (மு. நே.) |
| 14 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, நாவலப்பிட்டி | பழைய நகரசபை கட்டிடம், நாவலப்பிட்டி | 054-2050634<br>071-3702889 | எச்என்டிரிஎச்எம், ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), ஆங்கிலம் எச்என்டி (ப. நே.) எச்என்டிஎம் |
| 15 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, இரத்தினபுரி | புதிய நகர், இரத்தினபுரி | 045-2231492<br>045-2231493<br>071-8147124<br>071-3930219 | எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஏ (மு . நே.), எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.) |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு சம்மாந்துறை | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகவீதி, சம்மாந்துறை | 067-2261304<br>077-75153500 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.) ஆங்கிலத்தில் எச்என்டீ (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.), |
| 17 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், திருகோணமலை | கிண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-2223232<br>026-2050617<br>077-3659589 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஐரி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.), எச்என்டிருரி (ப.நே.) |

| குறியீட்டு இல. | நிறுவகப் பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | பாநெறிகள் |
|---|---|---|---|---|
| 18 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, தங்காலை | யாயவத்தை, நெட்டொல்பிட்டிய, தங்காலை | 047-2241845, 047-2241846 071-4491932 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஐரீ (மு.நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப.நே.) |
| 19 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகப் பிரிவு வவுனியா | ஏ9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா | 024-2052733 077-6162010 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), எச்என்டிஐரி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.) |

**குறிப்பு :**

1. க. பொ. த. (உ. த.) புதிய பாடத்திட்டத்தின்கீழ் உயர் தேசிய டிப்ளோவிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் பொது வினாப்பத்திரத்தில் கட்டாயம் சித்தி பெற்றிருத்தல் அவசியம்.

2. எச்என்டிசிஎஸ்பிரி, எச்என்டி ஆங்கிலம், எச்என்டிஐரி, எச்என்டிஎவ்ரி, எச்என்டிஎம், எச்என்டிபிஎம், எச்என்டிரிஎச்எம் தவிர்ந்த ஏனைய பாடநெறி தேர்விற்கான தேர்வுப் பிரமாணமாக க. பொ. த. (உ. த.) பரீட்சையின் Z புள்ளிகள் கருத்திற்கொள்ளப்படும்.

3. எச்என்டிசிஎஸ்பிரி, எச்என்டி ஆங்கிலம், எச்என்டிஐரி, எச்என்டிஎவ்ரி, எச்என்டிஎம், எச்என்டிபிஎம் மற்றும் எச்என்டிரிஎச்எம் இற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு நிறுவக மட்டத்திலான ஒரு எழுத்துமூல பரீட்சை நடாத்தப்படும்.

4. முழு நேர பாடநெறிக்கு 23 வயதிற்கு குறைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. உயர் தொழில்நுட்ப நிறுவகத்தால் நடாத்தப்படும் எந்தவொரு பாடநெறிக்கும் குறைந்தபட்சம் 100 பேர்களாவது பதிவுசெய்திருத்தல் வேண்டும்.

6. உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் எந்தவொரு பிரிவிலும் பாடநெறியை ஆரம்பிப்பதற்கு குறைந்தபட்சம் 50 பேர்கள் பதிவுசெய்திருத்தல் அவசியம்.

7. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் முதல் விருப்புத் தெரிவித்துள்ள பாடநெறிக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

8. முழுநேர பாடநெறி மாணவர்களுக்கு கிழமை நாட்களில் வகுப்புகள் நடைபெறுவதுடன், தேவை ஏற்படும் பட்சத்தில் வார இறுதியிலும் வகுப்புகளுக்கு சமுகமளித்தல் வேண்டும்.

9. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (முழு நேரம்) பாடநெறிக்கான விரிவுரை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுகளில் கிழமை நாட்களில் மாத்திரம் நிகழ்த்தப்படுவதுடன் மூன்றாம், நான்காம் ஆண்டுகளில் வார இறுதியில் மாத்திரம் நிகழ்த்தப்படும்.

10. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (முழு நேரம்) பாடநெறிக்கான விரிவுரை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு கிழமை நாட்களிலும் மூன்றாம் ஆண்டு வார இறுதியிலும் நிகழ்த்தப்படும்.

11. குறிப்பிட்ட உயர் தொழில்நுட்ப நிறுவகம் அல்லது உ.தொ.நி.பிரிவில் முழுநேர பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர், அம்மாணவர்கள் எவ்விதக்காரணம் கொண்டும் வேறேதேனும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்கு மாற்றப்பட மாட்டார்கள்.

12. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் பதிவுசெய்யும் மாணவர் ஒருவருக்கு, பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு தமது பதிவினை விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் இரத்துச்செய்துகொள்ள இந்நிறுவகம் இடமளிக்கும்.

13. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவக கல்விசார் பிரதிநிதிகள் சபை பரிந்துரை செய்கின்ற மற்றும் நிர்வாக சபை அனுமதிக்கின்ற வேறேதேனும் தகைமைகளும் கவனத்திற்கு எடுக்கப்படும்.

14. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே, 2018 ஆம் கல்வி ஆண்டுக்கான மாணவர் அனுமதிக்கான இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள www.sliate.ac.lk என்ற இணையத்தளத்தை நாடவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2018.03.16.

கலாநிதி டபிள்யு. ஹிலரி. ஈ. சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்.

*Office use only* – *Course Number …………*

***SPECIMEN APPLICATION FORM***

**SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION**

**Application form for Admission to Higher National Diploma Courses in year 2018**

(Please filled inEnglish BLOCK letters)

**Name the Courses in the Order of preference**

1. HND ..........................................................................
2. HND..........................................................................
3. HND..........................................................................

(Prority willbe given to first Preference

1. Name with Initials :——————.
2. Name/Names denoted by Initials :——————.
3. Postal Address :——————.
4. Date of Birth :
   Year :—————, Month :—————, Date :————.
   Age (as at 16.03.2018) :
   Years :————, Months :————, Days :—————.
5. National Identity Card No. :——————.
6. Email Address :——————.
7. Sex :——————.
8. Administrative District :——————.
   Contact Phone Number :——————.

9. (i) Results of G.C.E (Advanced Level) Examination :
Year:——————. Index No. :——————. Medium :——————.

| | *Subjects* | *Grade* |
|---|---|---|
| 1. | …………………… | …………… |
| 2. | …………………… | …………… |
| 3. | …………………… | …………… |
| 4. | …………………… | …………… |

Common General Paper : (Pass/Fail)

Aggregate/Z-Score of the above Examination :——————.

(ii) Results of G.C.E Ordinary Level Examination :-

Year:——————. Index No. :——————. Medium :——————.

| | *Subjects* | *Grade* | | *Subjects* | *Grade* |
|---|---|---|---|---|---|
| 1. | …………………… | …………… | 6. | …………………… | …………… |
| 2. | …………………… | …………… | 7. | …………………… | …………… |
| 3. | …………………… | …………… | 8. | …………………… | …………… |
| 4. | …………………… | …………… | 9. | …………………… | …………… |
| 5. | …………………… | …………… | 10. | …………………… | …………… |

10. Highest Qualification in English as a subject :——————.

11. Only for part time Courses :
Details of Present Employment/Self - employment :
Post :——————.
E.P.F. Number :——————.
Place of work and Address :——————.
Date of Appointment :——————.
BusinessRegistration number (BR): :——————.
Date of (BR) :——————.

I do hereby declare that I am not following any other full time course of study in any other state institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full time course at any other state institution or provide false or incorrect information I do hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

——————,
Signature of Applicant.

Date :——————.

(The bank receipt for Rs.500. Payable to SLIATE should be affixed below.)

**Affix the Bank Slip for the amount of Rs. 500 credited to the SLIATE account in the Peoples Bank**

| | | |
|---|---|---|
| Name of the Bank | : | People's Bank |
| Branch | : | Hyde Park Corner Branch, Colombo 02 |
| Account No. | : | 025-2-001-1-3397613 |

02-603

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

### இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆம் 2 ஆம் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை - 2017/ 2018

இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர் களுக்கான வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சைகள் 2018, யூன் மாதத்தில் கொழும்பிலும் வெளிநாடுகளிலுமுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் நடாத்தப்படும். வாய்மொழிப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

2. இரு வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்குள் ஒரே நேரத்தில் பரீட்சார்த்திகள் தோற்றும் வகையில் கால அட்டவணை தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்.**- முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சைகளை நிருவகிக்கின்ற பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் சேவைப்பிரமாணக் குறிப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது மொழிப் பரீட்சைக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு “அ” இல் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. மேலும் இலங்கை வெளிநாட்டு சேவை தொடர்பில் காணப்படும் முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு “ஆ” இல் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர்களின் விருப்பின் பேரில் வினைத் திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பாடங்களுக்கு ஒரு தடவை அல்லது பல தடவைகள் தோற்ற அவர்கள் அனுமதிக்கப்படுவர். இரண்டாவது மொழிப் பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர்களுக்கான வாய் மொழிப் பரீட்சைகளை அதே இடத்தில் அதே நேரத்தில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

4. **பாடங்கள்.**- வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

**1 ஆவது வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை**

பகுதி I

| பாட இல. | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| 01 | நிதியியல் | 3 |
| 02 | இலங்கையின் வரலாறும் புவியலும் | 3 |

பகுதி II

| பாட இல. | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| 03 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 04 | இராஜதந்திர செயன்முறை | 3 |
| 05 | சர்வதேச விவகாரங்கள் | 3 |
| 06 | இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பு, வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒழுங்கு விதிகள் மற்றும் கணினி அறிவு | 3 |

**2 ஆவது வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை**

பகுதி I

| பாட இல. | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| 21 | இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும் | 3 |
| 22 | நிருவாகம் | 3 |
| | (அ) அலுவலக முறைமைகளும் மற்றும் முறைகளும் | |
| | (ஆ) தாபனக் கோவை (தொகுதி I மற்றும் தொகுதி II) | |

பகுதி II

| பாட இல. | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| 23 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 24 | இராஜதந்திர செயன்முறை | 3 |
| 25 | சர்வதேச விவகாரங்கள் | 3 |

**வெளிநாட்டு மொழிகள்**

| | | |
|---|---|---|
| 07 | அரபு மொழி | 2 |
| 08 | பிரஞ்சு மொழி | 2 |
| 09 | ரஷ்சிய மொழி | 2 |
| 10 | ஸ்பானிய மொழி | 2 |
| 11 | ஹிந்தி மொழி | 2 |
| 12 | சீன மொழி | 2 |
| 13 | ஜேர்மன் மொழி | 2 |
| 14 | யப்பான் மொழி | 2 |
| 15 | இத்தாலி மொழி | 2 |
| 16 | கொரியன் மொழி | 2 |

| பாட இல. | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| | **இரண்டாவது மொழிகள்** | |
| 30 | சிங்களம் (எழுத்து மூலம்) | 2 |
| 31 | தமிழ் (எழுத்து மூலம்) | 2 |
| 32 | ஆங்கிலம் (எழுத்து மூலம்) | 2 |
| 33 | சிங்களம் (வாய்மொழி மூலம்) | |
| 34 | தமிழ் (வாய்மொழி மூலம்) | |
| 35 | ஆங்கிலம் (வாய்மொழி மூலம்) | |

5. இவ்வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களின் கவனத்திற் கொள்வதற்காக கீழே மீள வெளியிடப்பட்டிருக்கும் 1996.09.04 ஆந் திகதிய 701 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி கீழே தரப்படுகின்றது.

''திணைக்களப் பரீட்சைகள் (பதவியுயர்வு மற்றும் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை உட்பட) பதவியுயர்வுப் பரீட்சை மற்றும் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை ஆகியவற்றுக்கான மொழி மூலமானது உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவையில் சேர்வதற்காக போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும். மேலும் போட்டிப் பரீட்சையின்றி அடிப்படை ஆட்சேர்ப்பு நிகழ்ந்திருக்கும் பட்சத்தில் பதவியுயர்வு/வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான மொழி மூலமானது உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் சேர்வதற்கான தகைமை பெற்ற மொழி அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும்.

5.1 **பரீட்சை முடிவுகள் வழங்குதல்**.- பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 40% மான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். முதலாவது, இரண்டாவது வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்குரிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளது பெறுபேறடங்கிய இரு வெவ்வேறான பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரங்கள் பரீட்சைகள் ஆணையாளரினால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப் படும்.

6. பரீட்சார்த்திகள் வினாத்தாள்களுக்கு விடையளிப்பதற்காக பிற நாட்டு மொழிகள் தவிர சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வினாத்தாள்களைத் தயாரிக்க பரீட்சைகள் ஆணையாளரினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது.

7. பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உரித்தற்ற மொழி மூலம் ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என பின்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்து அவரது பரீட்சார்த்தித்தன்மை இரத்துச் செய்யப்படும்.

8. விண்ணப்பப்படிவங்கள் இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரமான ஏ4 அளவானதும், 1 இலிருந்து 8 வரையுள்ள விடயங்களை முதலாம் பக்கத்தில் கொண்டுள்ளதும், மீதி விடயங்களை 2 ஆம் பக்கத்தில் கொண்டுள்ளதுமான தாளில் தயாரிக்கப்படல் வேண்டும். தாளின் இரண்டு பக்கங்களும் பயன்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாக தயாரிக்கப்படல் வேண்டும். இரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பரீட்சை தொடர்பிலும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவுறாதவைகளும், வேண்டப்படும் விவரங்களைக் கொண்டிராதவைகளுமான விண்ணப்பங்கள் அறிவித்தல் வழங்கப்படாமல் நிராகரிக்கப்படலாமென்பதன் காரணமாக விண்ணப்பத்தின் ஒளிப்படப் பிரதியொன்றைத் தங்கள் வசம் வைத்திருக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. விண்ணப்பத்தை அனுப்புவதற்கு முன்னர் விண்ணப்பதாரர் பூர்த்திசெய்யப்பட்டுள்ள விண்ணப்பம் பரீட்சை தொடர்பில் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துடன் ஒத்திருக்கின்றதா என்பதையும், அதில் தரப்பட்டுள்ள சகல விபரங்களும் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றியும், பற்றுச்சீட்டானது அத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் சரிபார்த்தல் வேண்டும்.

*8.1 **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டப் பணம்***.- விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்வதில் சரியான தகவல்களை வழங்குவதில் நீங்கள் கவனமாக இருத்தல் வேண்டும். சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சைக்கு முன்னர் எந்நேரத்திலும் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் தகுதியற்றவரெனக் காணப்படுமிடத்து, பரீட்சார்த்தியாகும் தன்மை இரத்துச் செய்யப்படலாம்.

9. பரீட்சைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கின்ற நிபந்தனைகள், ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுவர். பரீட்சை நடைமுறை தொடர்பிலும், பெறுபேறுகளின் வெளியிடுகை தொடர்பிலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்களுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் விண்ணப்பதாரர்கள் உட்படுத்தப்படுவர். அத்தகைய சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் மீறப்படின், பரீட்சார்த்தி, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டப்பணத்துக்கு ஆளாக்கப்படுவார்.

10. விண்ணப்பதாரர்கள் அனைவரும் தங்களுடைய விண்ணப்பங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு 2018, மாச்சு 23 ஆந் திகதிக்கு முன்னராக அனுப்பி வைக்கக்கூடிய வகையில் வெளிநாட்டு அமைச்சின் வெளிநாட்டு நிருவாகப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணிபுரிபவர்கள் தமது விண்ணப்பங்களை தூதரகத் தலைவருக்கு ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

11. தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்கள் மாத்திரமே விண்ணப்பங்களை விண்ணப்பத்துள்ளார் என்ற அனுமானத்தின் அடிப்படையில், உரிய விண்ணப்பப்படிவத்தில் இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பங்களின் முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்திசெய்து குறித்த பரீட்சைக் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்ததன் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களை விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்கள் விதித்துரைக்கப்பட்ட வயது எல்லையை விஞ்சாமலிருக்குமிடத்து அவர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் உடனடியாக பத்திரிகைகளில் இது பற்றிய அறிவித்தலொன்று வெளியிடப்படும். தங்களுடைய அனுமதி அட்டைகளை பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்ட 02 அல்லது 03 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர்கள் அதைப் பற்றி பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவிலிருந்து அது பற்றி விசாரணை செய்யலாம். விசாரணை செய்யும்போது விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் அஞ்சல் முகவரி ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். வெளியூர் விண்ணப்பதாரரின் விடயத்தில் தமது அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு அவர் அனுப்புதல் வேண்டும். உரிய காலத்தில் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து விண்ணப்பதாரர்கள் அனுமதி அட்டைகளின் ஒளிப்படப் பிரதியொன்றை அனுப்புமாறு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குக் கோரிக்கை விடுக்கலாம். கோரிக்கைக் கடிதத்துடன் விண்ணப்பத்தின் பிரதியொன்றும் பரீட்சைக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டமைக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியொன்றும் இணைக்கப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்ட முழு விபரங்களுடன் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கை விடுப்பது பயனுடையதாகும். தொலைநகல் மூலம் அனுமதி அட்டையொன்றை பரீட்சைகள் ஆணையாளர் அனுப்புவதை இயலச் செய்வதன் பொருட்டு தொலைநகல் இலக்கமொன்றைக் குறிப்பிட்டு அனுப்புதல் பயனுடையதாகும். (பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையின் தொலைநகல் இல. 011-2784232 ஆகும்.)

11.1 விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தேவைப்பாட்டைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதாகவோ அவர் பதவிக்குத் தகுதியுடையவர் என்பதாகவோ கருதப்படலாகாது.

11.2 விண்ணப்பதாரர் விண்ணப்பத்திலும், அனுமதி அட்டையிலும் தமது கையொப்பத்தையிட்டு, நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும்.

12. மேலேயுள்ள 11 ஆம் பந்தியில் விதித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை அனுசரிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் கடிதத் தொடர்புகள் எவையும் பரீட்சைக்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சார்த்திகள் தங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை தமது கையொப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். தங்களுடைய அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

13. பின்வரும் ஆவணங்கள் பரீட்சை நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளக்கூடியவைகளாகும் :

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

14. முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணங்கள் விலக்களிக்கப்படுவதுடன் ஏனைய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணம் பின்வருமாறு அமையும் :

(அ) முதலாவது அமர்வு (முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் பாகத்திற்கு) கட்டணம் இலவசம்
(ஆ) அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அமர்வுக்கும்

| | ரூ. ச. |
|---|---|
| முழுப்பரீட்சைக்கும் | 1,200.00 |
| ஒரு பாடத்திற்கு | 600.00 |
| வாய்மொழிமூலப் பரீட்சை | 300.00 |

கட்டணங்கள் 2003-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு செலுத்தப்படும் வண்ணம் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலும் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டப்படல் வேண்டும்.

இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது என்பதனை தயவுடன் தருகின்றோம். மேலும் பரீட்சைக் கட்டணத்துக்காக முத்திரைகள் அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்குச் செலுத்திய கட்டணம் திருப்பியளிக்கப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றிக்கொள்ளவோ முடியாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தன்னிடத்தில் வைத்துக்கொள்வது சிறந்தது.

15. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்த விடயம் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதாகும். பரீட்சைகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாகும்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் வெவ்வேறு வாசகங்களுக்கிடையே வித்தியாசம் அல்லது முரண்பாடு நிலவுமிடத்து, சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

பிரசாத் காரியவசம்,
செயலாளர்/ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01,
2018, பெப்புருவரி 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு - இலங்கை**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆம் 2 ஆம் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை-2017/ 2018**

**1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers in Sri Lanka Foreign Service - 2017/2018**

மொழி மூலம் :

சிங்களம் -2
தமிழ் -3
ஆங்கிலம் -4
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக)

1. விண்ணப்பித்த பரீட்சை :

(இயைபுள்ள இலக்கத்தைக் கூட்டிற்குள் இடுக.)

| பரீட்சை | உரிய இல. |
|---|---|
| வி. க. 1 | 1 |
| வி. த. கா. 2 | 2 |
| இரண்டாவது மொழி | 3 |
| வெளிநாட்டு மொழி | 4 |

2. (அ) (i) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(ii) முதல் எழுத்துக்களுடன் கடைசிப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(iii) முதல் எழுத்துக்களுடன் கடைசிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

கடைசிப் பெயருக்குப் பின்னால் முதலெழுத்துக்களை எழுதவும். உ-ம் : SILVA, A.B.)

(ஆ) (i) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(ii) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

3. முகவரி:----.

(பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்புவதற்காக) - (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. பிறந்த திகதி:-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

5. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-

☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

6. பால் :-
ஆண் -0, பெண் -1
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக)

7. இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கான நியமனத் திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

8. தற்போது வகிக்கும் பதவி :----.

9. அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளவாறு விண்ணப்பிக்கும் பரீட்சைக்குரிய பாட எண்களைச் சுட்டிக்காட்டி தோற்றும் பாடங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் (விண்ணப்பத்தில் குறித்துக் காட்டப்பட்ட பாடங்களுக்கு பரீட்சார்த்திகள் தோற்ற அனுமதிக்கப்படுவார்) :

| பாடம் | பாட இல. |
|---|---|
| (i) | |
| (ii) | |
| (iii) | |
| (iv) | |
| (v) | |
| (vi) | |

10. பரீட்சார்த்தி முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு முன்னர் தோற்றியிருந்தாரா என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறெனில் பரீட்சைச் சுட்டெண், பாடங்கள், வருடம் மற்றும் மாதம் என்பவற்றைக் குறிப்பிடுக :----.

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிமொழிவதுடன் மேலே குறித்துக்காட்டப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்கு நான் தோற்றத் தகுதியுடையவனாக உள்ளேன் எனவும் உறுதி கூறுகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கூறப்படும் சட்டதிட்டங்களுக்கு உடன்படுகின்றேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான ........................... ஆம் இலக்கப் பற்றுச் சீட்டும் இணைக்கப்பட்டுள்ளது.

செலுத்திய கட்டணம்- ரூபா :----.

----,
விண்ணப்பதாரர் கையொப்பம்

திகதி:----.

பரீட்சைக் கட்டணம் :

(i) செலுத்திய தபால் அலுவலகம்/உப தபால் அலுவலகம்/ வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் :----.
(ii) செலுத்திய கட்டணம் :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச்சீட்டு இல. :----.

| |
|---|
| பற்றுச்சீட்டு மூலப்பிரதி இங்கு ஒட்டப்படுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியொன்றை கைவசம் வைத்திருக்கவும். |

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும் விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி .................. ................... என்பவரினால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியுடையவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவரது கையொப்பத்தையும் அவர் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரது கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி:----.
(உத்தியோகபூர்வ முத்திரை).

### பின்னிணைப்பு 'அ'

**சிங்களம்**.- சிங்கள மொழியிலான பரீட்சை, எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும்.

எழுத்து மூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும். இப்பரீட்சையில் சித்தியடைய 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை இவ்வினாப் பத்திரத்தில் பரீட்சார்த்திகள் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வினாப்பத்திரமானது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும் :-

(i) இலக்கணம்
(ii) சிங்களத்தில் எழுதப்பட்ட மனுக்கள் அல்லது கிராம உத்தியோகத்தரின் அறிக்கைகளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல்
(iii) ஆங்கிலத்திலுள்ள அலுவலக ஆவணமொன்றை சிங்களத்திற்கு மொழிபெயர்த்தல்

வாய்மொழி மூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும் :-

(i) சிங்களம் பேசும் ஒருவர் விளங்கி எழுதக் கூடிய வகையில் ஆங்கிலத்தில் இருப்பதான அலுவலக விடயமொன்றை சிங்களத்தில் உரைபெயர்த்து விளக்கிக் கூறல்
(ii) சிங்களத்திலுள்ள மனுவொன்றை வாசித்தல்
(iii) உரையாடலும் உரைபெயர்ப்பும்.- இப்பரீட்சையின் நோக்கம் பல சுதேசிய மொழிகளைப் பேசுகின்றவர்களால் பேசப்படும் சிங்கள மொழியை பரீட்சார்த்திகள் புரிந்துகொள்ளும் ஆற்றலை மதிப்பிடுவதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்திகளை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

**தமிழ்**.- தமிழ் மொழியிலுள்ள பரீட்சை, எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும்.

எழுத்து மூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும். பரீட்சார்த்திகள் சித்தியடைய 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை இவ்வினாப்பத்திரத்தில் பெறுதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாக அது அமையும் :-

(i) இலக்கணம்.
(ii) தமிழில் எழுதப்பட்ட மனுக்கள் அல்லது கிராம அலுவலரின் அறிக்கையை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தல்.
(iii) ஆங்கிலத்திலுள்ள அலுவலகக் கடிதம் அல்லது ஆவணத்தின் பகுதியை தமிழிற்கு மொழிபெயர்த்தல்.

வாய்மொழி மூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:-

(i) தமிழ் பேசும் ஒருவர் விளங்கி எழுதக் கூடிய வகையில் ஆங்கிலத்தில் இருப்பதான அலுவலக விடயமொன்றை தமிழில் மொழிபெயர்த்து விளக்கிக் கூறுதல்.
(ii) தமிழிலுள்ள மனுவொன்றை வாசித்தல்.
(iii) உரையாடலும் உரைபெயர்ப்பும்.- இப்பரீட்சையின் நோக்கம் பல சுதேசிய மொழிகளைப் பேசுகின்ற வர்களால் பேசப்படும் தமிழ் மொழியை பரீட்சார்த்திகள் புரிந்து கொள்ளும் ஆற்றலை மதிப்பிடுவதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்திகளை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

**ஆங்கிலம்.-** ஆங்கில வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகவும் பரீட்சார்த்திகள் சித்தியடைய 40% புள்ளிகளையேனும் இவ்வினாப்பத்திரத்தில் பெறுதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாக அது அமையும் :-

(i) இலக்கணம்
(ii) கிரகித்தல்
(iii) சுருக்கியெழுதுதல்
(iv) அறிக்கை மற்றும் கடிதம் எழுதுதல்
(v) சொல்வளம்

பரீட்சார்த்திகளின் தகவல்களுக்காக வினாத்தாள்களின் மாதிரியொன்று கீழே தரப்படுகின்றது :-

(a) Fill in the blanks with the correct form of the verb given within brackets:-

During the last war our country ............1 (be) a British Colony ................2 (take) a full part in the war effort. Consequently our tea, rubber and coconut .............3 (ship) to Briton at very favourable prices and the foreign exchange we .................4 (earn) ................5 (accumulate) as assets. Again during the Korean War in the early fifties our products ................7 (not have) any exchange problem. However, political independence .............8 (not given rise) to any effort to..................9 (build up) our economy we ................10 (be) a nation of consumers and we .................11 (squander) our foreign exchange on consumer goods which ................12 (can produce) locally and incidentally diversified our economy. Over the last decade we ................ (begin) to feel the pinch when our primary products ................14 (fail) to command good prices in the world market while our requirements of food both rice and subsidiary food stuffs ...........15 (rise) in price.

(b) Fill in the blanks with the correct preposition (where necessary)

As Assistant Secretary ..................16 charge .............17 subjects, it was my duty to convene groups of officers dealing ...............18 different aspect of development work in the Ministry ...................19 time to time. They discussed ..............20 various problems that they confronted and which they could not cope ...............21 on their own. We were thus able to share our experience ............22 each other and make concrete proposals .............23 the Secretary every month. He in turn put .............24 his own plans for discussion ...............25 these meetings.

(c) Underline the correct letters given within brackets that would complete the spelling of the following words.

26. Har..................ment (rass/as/ass)
27. Ember............(rass/as/ass)
28. Tol.................(arreance/earnce/erence)
29. Par..................arian (liament/limen/liment)
30. Bal..................ing (let/lat/lot)
31. Itin..................(erary/arary/erarie)
32. Pers.................(everance/everence/ewerence)
33. Bour.................(geoise/joursie/juwarsy)
34. Prolet................(ariet/ariat/eriyat)
35. Com..............ate(memorr/emor/memor)

(d)In each of the following statements underline the correct word within brackets:-

36.The inventory was checked by the Board of (survellance/survey/surveyours).

37. At the inquiry I had to be satisfied that accused officer had (contradicted/contravened/contaminated) the regulations.

38.Every receipt should have a (counterfoil/counterfeit/counterpane) for the purpose of audit.

39.There was a possibility that the prosecution had (fabricated/fumigated/promulgated) the evidence.

40.(Discrete/discretionary/discriminatory) power was given to the Head of the Department under the relevant Act.

41. The Police Party had (laid/lied/lain) in ambush until the bribe taker arrived.

42.The entire staff turned upon (facilitate/infiltrate/felicitate) the watcher on his retirement.

43.In times of national crisis we must avoid (luxuriant/luxurious) habits.

44.Martial music was played over the radio during height of the battle to keep up the (moral/morale/morals) of the people.

45.Candidates are advised to use (stationary/stationery) sparingly owing to the acute paper shortage.

(e) Underline the correct phrase in the brackets that means the same as the word or phrase underlined in each sentence:-

46.In good management the boss should support his staff in their work (back out/back up/back away)

47. The sales and replacement of stocks amounted to over Rs.5,000 (turn out/turn up/turn away)

48.We were warned at the start not to let out work get into arrears (set out/outset)

49.The younger son wasted his father's wealth in a few years (ran over/ran through)

50.I wanted to see the film, but the queue deterred me from going (put away/put off)

**Part B**

Read the following passage carefully and then answer the questions set out below:

Most modern political ideals such as, for example, as justice, liberty, constitutional government and respect for the law or at least the definition of them, began with inflection of Greek thinkers upon the institutions of City State. But in the long history of political thought the meaning of such terms has been variously modified and always that meaning has to be understood in the light of the institutions by which the indicates were to be realized and of the society in which those institutions did their work. The Greek City States was so different from the political communities in which modern men live that it requires no small effort of the imagination to picture its social and political life. The Greek Philosophers were thinking of political practices far different from any that have prevailed commonly in modern world, and the whole climate of opinion in which the work was done different. Their problems though not without their analogies in the present, were never identical with modern problems, and the ethical apparatus by which political life was evaluated and criticized varied widely from any that now prevails. In order to understand at all accurately what their theories meant is necessary first to realize at least roughly what kind of institutions they had in view and what citizenship connected, as an effect as and an ideal, to the public for whom they wrote. For this purpose the Government of Athens is especially important, partly because it is the best known, but chiefly because it was an object of special concern to the greatest of Greek Philosophers.

As compared with modern states the ancient City-State was exceedingly small both in area and in population. The numbers were exceedingly uncertain but, a figure somewhat in excess of three hundred thousand would be approximately correct. Such an arrangement of a small territory dominated by a single City was typical off the City State.

In each of the following cases, choose the alternative which in your opinion supports the views expressed in the above passage. Place a thick (right mark) against the correct answer:-

51.Athens is significant for the students of Greek political thought mainly because:-

(a) it was the most powerful of the Greek City State;
(b) its ideals had been carefully studied by the Greek themselves;
(c) it had the most ideal form of Government;
(d) it is the best known of the Greek City State.

52.Greek political thought was concerned with problems:-

(a) entirely unrelated to;
(b) identical with;
(c) different from Analogous but to;

53.The moral and religious basis of Greek political idea is:-

(a) very similar to modern moral and religious ideas;
(b) unknown;
(c) very different from modern moral and religious ideas.

54.It is:-

(a) easy;
(b) not at all easy;
(c) impossible, for a modern man to imagine what life was like in a Greek City State.

55. In comparison with the ancient Greek City States are:-

(a) very large;
(b) very small;
(c) about the same size.

56. The population of ancient Greek City State was:-

(a) much less than 300,000
(b) over 3 million
(c) just over 300,000

57. The City State of Athens comparisons:-

(a) a small territory govern by a single City;
(b) a large territory govern by a number of cities;
(c) a small territory with village councils;
(d) a large territory with a decentralized administration.

58. The different times in the history of the world people:-

(a) have thought in basically the same way;
(b) have thought in different ways;
(c) have contradicted the views of people of the previous generation.

59. Details of political theory are derived from Greek political thought:-

(a) because the Greek City States was very similar to modern states;
(b) in spite of Greek City State being very different from modern states;
(c) because modern political theorists are students of Greek Philosophy.

60. The meaning of political ideal at a particular moment in European History since the time of the Greek can be defined only be:-

(a) relating it to its context;
(b) tracing it back to its original meaning among the Greeks;
(c) investigating the meaning of the Greek word for it;
(d) taking into account only those features in it which have persisted through out its history.

61. Write sentences using each of the following words so as to bring out its meaning clearly:-

Arbitration, emoluments, etiquette, consolidate, hypothetical, retrospective, exigencies, evaluate, review, empower.

EITHER

62. Write a letter to the Head of an Educational Institute in an English speaking country, setting out the following information in an orderly manner:-

(i) The equivalence of our examination certificate to the certificate specified in this letter cannot be determined as the examining authorities in Sri Lanka have been consulted by the institution concerned in that country:
(ii) The G.C.E. (Ordinary Level) Credit Pass has been officially equated with an ordinary pass in London (Ordinary Level):
(iii) The receipt of the letter sent to the Commissioner General of Examinations is acknowledged:
(iv) Any further information in this matter may be obtained from the Embassy of the Republic of Sri Lanka in that country:

63. Write a memorandum to the Secretary, Bureau of Standards marking out a case for the adoption of the 24 hours clock in this country stating the advantages of such a measure.

**பின்னிணைப்பு 'ஆ'**

1. **முதலாவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை :**

1.1 முதலாவது வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் உத்தியோகத்தர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

1.2 பின்வரும் பாடப்பரப்புகளிலான பரீட்சை :-

பகுதி I :

(i) நிதியியல் - நிதியியல் தொடர்பான பரீட்சை பின்வரும் விடயப்பரப்புக்கள் அடிப்படையில் அமையும் :

(அ) இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் - பகுதி I (அத்தியாயம் X நீங்கலாக)

(ஆ) நடைமுறை ஆண்டின் மதிப்பீடுகள். உ-ம் : அவற்றின் ஒழுங்குகள், வருமானத் தலைப்புகள், நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டங்கள்

(இ) கச்சேரிகளினுள் கையாளப்படும் குறித்த கணக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டங் கள்.

(ii) இலங்கையின் வரலாறும் புவியியலும் :

**பகுதி II - விசேட வினாத்தாள் :**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்
(iv) இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பு, வெளிவிவகார அமைச்சின் ஒழுங்குவிதிகள் மற்றும் கணினி அறிவு

1.3 ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங் களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் பரீட் சார்த்திகள் சித்தியடைய ஒவ்வொரு வினாத்தாளிலும் 40 வீதமான புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

1.4 உத்தியோகத்தர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனி யாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனு மதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ள போதே அத்தகைய பரீட்சார்த்தி சித்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுவார்.

**2. இரண்டாம் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை :**

2.1 இரண்டாவது வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் அலுவலர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இரு பகுதிகளுக்கும் தோற்றலாம்.

2.2 **பின்வரும் பாடங்களிலான பரீட்சை :**

**பகுதி I -**

(i) இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும்,
(ii) நிருவாகம் - இவ்வினாத்தாள் பின்வரும் பரப்புகளை உள்ளடக்கியிருக்கும்:

(அ) அலுவலக நடைமுறைகளும் நிறுவன முறைகளும்.

(ஆ) தாபன விதிக் கோவை - தொகுதி I மற்றும் தொகுதி II

**பகுதி II - விசேட வினாத்தாள்**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்

2.3 ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் பரீட்சார்த்திகள் சித்தியடைய ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையேனும் பெறுதல் வேண்டும்.

2.4 உத்தியோகத்தர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனியாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ள போதே அத்தகைய பரீட்சார்த்தி அப்பகுதியில் சித்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுவார்.

**குறிப்பு:-** (i) அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான வினாக்கள் பிரதானமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கான விசேட குறிப்புகளை உள்ளிட்டு இலங்கை அரசின் பாராளுமன்ற முறைமை மற்றும் அரசியலமைப்பு விருத்திப் பரிணாம வளர்ச்சி போன்ற விடயங்களை உள்ளடக்கியிருக்கும். சர்வதேச சட்டம் தொடர்பான வினாக்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகள், இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகள் இன்னும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட நாடுகளின் கடமைகள் மற்றும் உரிமைகள், தூதுவராலயச் சட்டம் மற்றும் உடன்படிக்கைகளுக்கான சட்டம் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

(ii) சட்டத்தரணியாக விளங்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் பட்டமொன்றைப் பெற்று விளங்கும் அலுவலர் ஒருவர், அவர் உரிய பரீட்சையில் அப்பாடங்களில் சித்தியொன்றைப் பெற்றுள்ளார் எனக்கருதி அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் எனும் வினாத்தாளுக்கு அவர் தோற்றுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

**3. வெளிநாட்டு மொழிகள் :**

3.1 வெளிநாட்டு மொழிகள் :

(i) அரபு மொழி
(ii) பிரஞ்சு மொழி
(iii) ரஷ்சிய மொழி
(iv) ஸ்பானிய மொழி
(v) ஹிந்தி மொழி
(vi) சீன மொழி
(vii) ஜேர்மன் மொழி
(viii) யப்பான் மொழி
(ix) இத்தாலி மொழி
(x) கொரியன் மொழி

3.2 வெளிநாட்டு மொழிகள் வினாத்தாள்கள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாக இருக்கும். சித்தியெய்துவதற்குப் பரீட்சார்த்திகள் 40% ஆன புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

2-854

---

## உணவு ஆணையாளர் திணைக்களம்

### உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் வேலை மேற்பார்வையாளர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் வேலை மேற்பார்வையாளர் பதவியின் III ஆம் தரத்தில் நிலவும் பதவி வெற்றிடமொன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய A4 அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுரைகளுக்கமைய தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க் குறிப்பிடப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "உணவு ஆணையாளர், உணவு ஆணையாளர் திணைக்களம், இலக்கம் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வேலை மேற்பார்வையாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2018, மாச்சு மாதம் 09 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பம் அல்லது அதனுடன் தொடர்பான ஆவணமொன்றோ தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் சம்பந்தமாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளிடையே ஒருவர் வேலை மேற்பார்வையாளர் III ஆம் தரப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவார்.

2. **சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித்துடையதாகும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இப்பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட (03) கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அந்த மூன்று (03) வருட காலத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 01/ 2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கமைய, 5 வருடத்தினுள் II ஆம் மட்டத்திற்குரிய அரச கரும மொழி தொடர்பிலான தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரைகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணங்களுக்கும் திணைக்களம் சார்ந்த ஏனைய பணிப்புரைகளுக்கும் இப்பதவி கட்டுப்படுதல் வேண்டும்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்கு 03/ 2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கமைய MN 3 - 2016 இன் கீழ் ரூபா 31,040-10 x 445-11 x 660-10 x 730-10 x 750 - ரூபா. 57,550 (மாதாந்த) சம்பளப் படிமுறைகள் உரித்துடையதாகும்.

4. (i) **கல்வித் தகைமைகள்** :

(1) பௌதீக விஞ்ஞானம் மற்றும் இரசாயன விஞ்ஞானத்திற்கு திறமைச் சித்திகளுடன் விஞ்ஞான / கணிதத் துறைக்குரிய மூன்று பாடங்களுடன் க. பொ .த. (உ. த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் மற்றும்

(2) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

(ii) **தொழில் தகைமைகள்** :

(1) மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்.

அல்லது

(2) தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா சான்றிதழ்.

அல்லது

(3) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப் படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா சான்றிதழ்.

அல்லது

(4) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் படும் தொழில்நுட்ப சான்றிதழ்.

அல்லது

(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப் படும் பொறியியல் பரீட்சையில் 1 ஆம் பகுதியை நிறைவு செய்திருத்தல்.

அல்லது

(6) தொழில் துறையுடன் தொடர்பான தேசிய தொழிற் பயிற்சி தகைமை சான்றிதழின் (NVQ) 6 ஆவது மட்டத்தை நிறைவு செய்திருத்தல்.

அல்லது

(7) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களை வழங்கும் நிறுனங்களிடம் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. **உடற் தகைமைகள்**.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்குரிய உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(ii) நன்னடத்தையுடைவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியன்று அந்தத் தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **எழுத்துப் பரீட்சை** :

| வினாப் பத்திரத்தின் பெயர் | காலம் (மணித்தியாலம்) | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் | பாடப் பரப்பு |
|---|---|---|---|---|
| 1. விடயம் சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 3 மணித்தியாலம் | 100 | 40% | கட்டிட நிர்மாணம், திட்ட வரைவு தயாரித்தல். பராமரிப்பு (குளிரூட்டி, நீர்க் குழாய்கள், மின்சாரம்), தளக்கோளத் திட்டத்தை (Plan) வாசித்தல், வேலைத் தளமொன்றில் ஊழியர் முகாமைத்துவம் பற்றிய அடிப்படை எண்ணக் கருக்கள் |
| 2. நுண்ணறிவுப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40% | பொது அறிவு |

(i) **நேர்முகப் பரீட்சை**.- புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளைச் சோதிப்பதற்காக மாத்திரம் நடாத்தப்படும்.

9. **பரீட்சைக்கான நிபந்தனைகள்** :

(i) முறையாக விண்ணப்பங்களை அனுப்பியிருக்கும் தேர்வுநாடிகளுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தேர்வுநாடி தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தேர்வுநாடிகளால் மேற்கொள்ளப்படும் போக்குவரத்துச் செலவுகள் அல்லது ஏனைய எந்தவொரு செலவுக்கும் எவ்வித செலுத்துகைகளும் மேற்கொள்ளப்பட மாட்டாது.

(iii) தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தேர்வுநாடி தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக

(அ) ஆளடையாளத் திணைக்களத்தினால் வெளியிடப் பட்டுள்ள தேசிய அடையாள அட்டை

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். வேண்டிக்கொள்ளப்பட்ட மொழிமூலத்தை பின்னர் மாற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக உணவு ஆணையாளர் இடமளிப்பார். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுதலானது தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு தேர்வுநாடிகள் கட்டுப்படுதல் வேண்டும்.

(vii) இந்தப் பரீட்சை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

10. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை :**

(i) மாதிரி விண்ணப்பப்படிவம் A4 (24 x 29 செ.மீ.) அளவிலான தாளைப் பயன்படுத்தி இலக்கம் 01 முதல் 04 வரையிலான பகுதிகளை முதலாவது பக்கத்திலும் இலக்கம் 05 முதல் மிகுதிப் பகுதிகளை ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு தயாரித்து தமது கையெழுத்தினாலேயே சரியாக பூரணப்படுத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத மற்றும் பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தபாலில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்துக்கொள்ளுமுகமாக நேரகாலத்துடன் விண்ணப்பங்களை தபாலில் இடுமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

(iv) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப் பங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(v) பரீட்சைக் கட்டணம் 750/- ஆகும். உணவு ஆணை யாளரின் பெயரில் இலங்கை வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் பேணிவரப்படும் 7042667 ஆம் இலக்க கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளைக்கும் செலுத்திப் பெறப்பட்ட வைப்புச் சீட்டை கழராதவாறு உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப் பத்திரத்தின் மற்றும் வைப்புச் சீட்டின் பிரதியை உங்களிடம் வைத்துக்கொள்வது பிரயோசனமாக இருக்கும். எந்தக் காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. அத்துடன் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

(vi) சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், தாம் வசிக்கும் பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிஸ், முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியல் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், வருடச் சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதிலும் அதிகமான வருடாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையொன்றின் அதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது பிற மத ஸ்தலங்களுக்குப் பொறுப்பான தகைமையுடைய மதகுருமார்கள் போன்றோரில் ஒருவரின் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

(vii) அரச அல்லது மாகாண அரச சேவையில் புணிபுரியும் விண்ணப்பதாரிகள் அவர்களது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(viii) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

12. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் உணவு ஆணையாளருக்கே உண்டு. சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் பரீட்சைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கும் பொதுவான சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

ஜே. கிருஷ்ணமூர்த்தி,
உணவு ஆணையாளர்,
உணவு ஆணையாளர் திணைக்களம்.

உணவு ஆணையாளர் திணைக்களம்,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02,
2018, பெப்புருவரி 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் வேலை மேற்பார்வையாளர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

Open Competitive Examination for the Recruitment of Supervisory Management Assistant (Technical Service Category) Inspector of Works Grade III of Food Commissioner's Department 2018

☐

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

- பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
  - சிங்களம் - 2
  - தமிழ் - 3
  - ஆங்கிலம் - 4 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1.

1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA HERATH )

1.2 பின்னால் வரும் பெயரை ஆரம்பத்திலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் பயன் படுத்தி பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

(உ-ம்: HERATH H.M.S.K)

1.3 முழுப் பெயர் :----.

(சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.

2.1 நிரந்தர முகவரி :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2 நிரந்தர முகவரி :----.
(சிங்களத்தில்/ தமிழில்)

2.3 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தொலைபேசி இலக்கம் :----.

4. 4.1 பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

5. 5.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. கல்வித் தகைமைகள் :

6.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சை ஆண்டு, மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

6.2 க. பொ. த (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சை ஆண்டு, மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 3 | |
| 2 | | 4 | |

6.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருப்பின் :

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் :----.
(iii) சுட்டிலக்கம் :----.

7. தொழிற் தகைமைகள் :

(i) :----.
(ii) :----.

8. அனுபவம் :----.

9. நீங்கள் குற்றமொன்றுக்காக எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டில் √ அடையாளத்தை இடவும்)

(ஆம் எனில், விபரத்தைக் குறிப்பிடவும்) :----.

10. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வைப்புச் சீட்டு பற்றிய விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கிக் கிளை : ----.
(ii) செலுத்திய தொகை ரூபா :----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வைப்புச் சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும் (வைப்புச் சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்) |

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என கௌரவபூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதியை பூரணப்படுத்தாமல் மற்றும்/ அல்லது தவறான முறையில் பூரணப்படுத்துவதனால் ஏற்படும் இழப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும், இதில் சகல பகுதிகளும் சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்./ வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிரகடனம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டால் பணி நீக்கத்திற்கு ஆளாகுவேன் என்பதையும் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்/ வெளிப் படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றிக்கொள்ள மாட்டேன்.

----,

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும், அந்த வைப்புச் சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதெனவும், ................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்து கின்றேன்.

----,
உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை ஊடாக உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

12. விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் இருப்பவராயின் திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .................................................. இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ நிறுவனத்தில், நிரந்தர/ அமைய/ தற்காலிக உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் எனவும், இந்தப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை ஊடாக உறுதிப்படுத்தவும்).
திகதி :----.

2-736

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.